RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 180 ஜூலை.6 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# வடமாநிலங்களில் வெளுத்து வாங்கும் கனமழை: வெள்ளக்காடாக மாறின டில்லி, மும்பை

புதுடில்லி: ஜூலை.6-

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், மஹாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் கனமழை கொட்டி வருகிறது. மும்பை, டில்லி ஆகிய நகரங்கள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றன.

தலைநகர் டில்லி, மஹாராஷ்டிரா, மத்திய பிரதேசம், குஜராத், ஒடிஷா, கோவா உள்ளிட்ட மாநிலங்களில் பரவலாக பெய்து வரும் கனமழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மஹாராஷ்டிராவின் மும்பை, தானே, ராய்கட், பால்கர் மாவட்டங்களில், நேற்று இரவு முதல் இன்று காலை வரை கொட்டிய கனமழையால் முக்கிய சாலைகள் வெள்ளக்காடாக மாறின. பஸ் போக்குவரத்து மட்டுமின்றி, புறநகர் ரயில் சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

மும்பையில் மழை மேலும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்பதால், அவசியமின்றி மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என, அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். சூறைக்காற்றுடன் பெய்த கனமழையால், மும்பையில் விமான சேவை பாதிக்கப்பட்டது.

கனமழையால் டில்லியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகளில் மழைநீர் வெள்ளம் போல சூழ்ந்துள்ளது. கோவாவிலும், மழையால் முக்கிய சாலைகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. குஜராத்தில் கனமழையால் முக்கிய நீர்நிலைகள் நிரம்பியுள்ளன.



இதற்கிடையே, இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை: பருவமழை தீவிரமடைந்துள்ளதால், வடமாநிலங்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேலும் ஒரு வாரத்துக்கு கனமழை நீடிக்கும். மஹாராஷ்டிராவின் மும்பையில், அடுத்த சில நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. குஜராத், மத்திய பிரதேசம், ஒடிஷாவில் நாளை மறுநாள் வரை கனமழை நீடிக்கும். பின், படிப்படியாக மழை குறையும்.

டில்லியில் அடுத்த மூன்று நாட்களுக்கு மழை நீடிக்கும் நிலையில், ஒரு சில இடங்களில் மணிக்கு, 50 கி.மீ., வேகத்தில் காற்று வீசும். சத்தீஸ்கர், ராஜஸ்தான், பீஹார் மற்றும் தெலுங்கானாவில், 7 ம் தேதி வரையிலும், ஹிமாச்சல், உத்தரகண்டில் வரும் 8ம் தேதி வரையும் மழை நீடிக்கும். ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் மற்றும் சிக்கிமில், வரும் 9 வரை கனமழை நீடிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மரம் முறிந்து விழுந்தது முகேஷ் அம்பானி தப்பினார்

மும்பையில் சூறைக்காற்றுடன் பெய்த மழையால், பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பாந்த்ரா பகுதியில் பிரபல தொழிலதிபர் முகேஷ் அம்பானி சென்ற போது, அவரது காருக்கு முன்னால் சென்ற பாதுகாப்பு வாகனம் மீது பெரிய மரம் ஒன்று திடீரென முறிந்து விழுந்தது. அதிலிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் தப்பினர். முகேஷ் அம்பானி இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக எந்த பாதிப்பும் இல்லாமல் தப்பினார். ஒரு மணி நேரத்தில் மரம் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரானது.

# பொதுமக்கள் ஆளுநர் மாளிகையை அணுகலாம் என்ற கவர்னரின் பேச்சுக்கு துரைமுருகன் பதிலடி

வேலூர், ஜூலை.06-

மக்கள் பிரச்சனைகளுக்காக போராடுபவர்கள் தங்களுக்கு உதவி தேவைப் பட்டால் ஆளுநர் மாளிகையை அணுகலாம் என்று தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தெரிவித்திருந்த கருத்துக்கு, திமுக பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் பதிலளித்துள்ளார்.




வேலூரில் செய்தியாளர்களை சந்தித்த துரை முருகனிடம், ஆளுநரின் இந்தக் கருத்து குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "ஆரம்பம் ஆவது கவர்னருக்குள்ளே, அது ஆடி அடங்கி போவதும் கவர்னருக்குள்ளே" என்று சுருக்கமாக பதிலளித்தார்.

தொடர்ந்து, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, "இதுகுறித்து எங்கள் கட்சித் தரப்பில் இருந்து ஏற்கனவே நூற்றுக்கணக்கான விளக்கங்கள் அளிக்கப் பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

மேலும், குதிரைப் பேரம் தொடர்பாக திமுக, அதிமுக மற்றும் பாஜக ஆகிய கட்சிகள் ஆளுநரிடம் புகார் மனு அளித்துள்ள விவகாரம் குறித்த கேள்விக்கு பதிலளித்த துரைமுருகன், "இதுகுறித்து எங்கள் கட்சியின் அமைப்புச் செயலாளர் மிகத் தெளிவான விளக்கம் அளித்துள்ளார். அவருடைய குரல்தான் என்னுடைய குரல்" என்று கூறினார்.

இதன் மூலம், ஆளுநரின் கருத்து மற்றும் அண்மைய அரசியல் விவகாரங்கள் குறித்து திமுகவின் நிலைப்பாட்டை துரைமுருகன் சுருக்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

# சாதிச் சான்றிதழ், தாட்கோ கடன் சிக்கல்களுக்கு தீர்வு காண அமைச்சர் வன்னியரசிடம் பழங்குடியின அமைப்புகள் கோரிக்கை

சென்னை, ஜூலை.06-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், மாநில அளவிலான பங்களிப்பார்கள் கூட்டம், சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. சமூக நீதித் துறை அமைச்சர் வன்னியரசு தலைமையில் நடந்த கூட்டத்தில், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ஆ.பொன்னுசாமி, மாநில துணை செயலாளர் இரா.சரவணன் உட்பட தமிழகத்தில் உள்ள பல்வேறு அமைப்புகளில் இருந்து பழங்குடியின செயற்பாட்டாளர்கள் பங்கேற்றனர்.




கூட்டத்தில், பழங்குடியின மக்களுக்கு, குறிப்பாக, ராணிப்பேட்டை கோட்டாட்சியர், காட்டு நாயக்கன் மக்களுக்கு சாதிச் சான்று வழங்க விண்ணப்பம் வாங்குவதை மறுப்பது, மதுரையில் மலை வேடன், காட்டு நாயக்கன், மலைக்குறவன், குருமன்ஸ் ஆகிய மக்களுக்கு இனச் சான்று வழங்கப்படாதது. 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் வன உரிமைச் சட்டத்தின் படி, பழங்குடியின மக்களுக்கு வன உரிமைச் சான்று மறுக்கப் படுவது குறித்து அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டது.

மேலும், பழங்குடியின மக்களுக்கு தாட்கோ மூலம் மானிய கடன் வந்தாலும், அவை வங்கிகளில் முடக்கப்படுவதாகவும், அதை கவனத்தில் கொண்டு தீர்வு காண வேண்டும். அத்துடன், ஈரோடு மாவட்ட மலையாளி, மலைப் புலையன், வேட்டைக்காரன், குறவன் ஆகிய இன மக்களை எஸ்டி பட்டியலில் சேர்க்க வேண்டும். மலைவாழ் மக்களின் அனுபவ நிலங்களுக்கு பட்டா வழங்க ஆவண செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டன.

அதை பரிசீலித்து முதல் வருக்கும், ஒவ்வொரு துறைக்கும் அனுப்பவதாக தெரிவித்த அமைச்சர் வன்னியரசு, மாதத்துக்கு ஒரு முறை பழங்குடியினர் செயல்பாட்டாளர் கூட் டத்தை நடத்தி ஆய்வு செய்யப்படும் என உறுதியளித்தார்.

இதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் என்.சுப்பையன், கூடுதல் செயலர் உமா மகேஸ்வரி, ஆதி திராவிடர் நல இயக்குநர் கி.செந்தில் ராஜ், பழங்குடியினர் நல இயக்குநர் அண்ணா துரை பங்கேற்றனர்.

# அமைச்சர் வந்தும் நிகழ்ச்சிக்கு வராத த.வெ.க., எம்.எல்.ஏ.க்கள்; மேடையில் இருந்து வேகமாக வெளியேறிய நிர்மல் குமார்

மதுரை, ஜூலை.06-

மதுரை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு தவெக எம்.எல்.ஏக்கள் வராததால் அதிருப்தி அடைந்த அமைச்சர் நிர்மல்குமார், விழா மேடையில் இருந்து வந்த வேகத்தில் புறப்பட்டு சென்றார்.




மதுரை அரசு ஆய்வக நுட்புனர் சங்கம் சார்பில் வெள்ளிவிழா ஆண்டு மலர் வெளியீட்டு விழா, மதுரை மருத்துவக் கல்லூரி அரங்கத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் சிறப்பு விருந்தினர்களாக அமைச்சர் நிர்மல் குமார், மதுரை வடக்கு தவெக எம்எல்ஏ கல்லாணை, மதுரை தெற்கு தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர் கோபிசன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, அழைப்பிதழிலும் அவர்கள் பெயர் அச்சிடப்பட்டிருந்தது.

இன்று காலை 10 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என கூறப்பட்டிருந்த நிலையில் 9.50 மணிக்கு அமைச்சர் நிர்மல் குமார் வருகை தந்தார். அவரை வாசலில் இருந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். அரங்கில் நுழைந்த அவர், அங்கிருந்தவர்களுக்கு வணக்கம் வைத்து மேடை ஏறினார்.

சிறப்பு விருந்தினரான அமைச்சர் வருகை தந்த பின்னரும் கூட அழைப்பு விடுக்கப்பட்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வரவில்லை. இதுகுறித்து மேடை ஏறிய அமைச்சரிடம் விழா ஏற்பாட்டாளர் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் வரவேண்டி இருப்பதாக தெரிவித்ததாக கூறப்படுகிறது.

அமைச்சர் வந்தும் நிகழ்ச்சிக்கு வராத தவெக எம்எல்ஏக்கள்; மேடையில் இருந்து வேகமாக வெளியேறிய நிர்மல் குமார்

இதனைக் கேட்ட அவர், உடனடியாக மேடையில் இருந்து குத்துவிளக்கு கூட ஏற்றாமல் இறங்கி, அங்கிருந்து புறப்பட்டு சென்றார். இதனால், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

பொதுவாக அமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் கலந்துகொள்வதைப் பார்க்க முடியும். ஆனால் அமைச்சர் மற்றும் அவருடன் ஒரு சில பேரை தவிர கட்சி நிர்வாகிகள் யாரும் இந்த விழாவில் பங்கேற்க வரவில்லை என தெரிகிறது.

தவெக எம்.எல்.ஏக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்க வராததால் அமைச்சர் நிர்மல் குமார் அதிருப்தி அடைந்ததாக கூறப்படுகிறது. அமைச்சர் பங்கேற்ற நிகழ்ச்சியில் அக்கட்சி எம்.எல்.ஏக்களே பங்கேற்காது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சிக்காக செல்ல வேண்டி இருப்பதால் அமைச்சர் உடனடியாக புறப்பட்டு சென்றதாக அமைச்சரின் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், குறிப்பிட்ட நிகழ்வில் தவெகவை சார்ந்த நிர்வாகிகள் கூட பங்கேற்று வரவேற்பு தெரிவிக்காதது அமைச்சருக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பாக மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில் அமைச்சர்கள் நிர்மல் குமார், விஸ்வநாதன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கல்லாணை, எஸ்.ஆர் தங்க பாண்டியன், கோபிசன், கார்த்திகேயன், மதார் பத்ருதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவையை சினிமாவாக நினைக்கிறார் முதல்வர் விஜய்: கே.பி.முனுசாமி காட்டம்

சென்னை, ஜூலை.06-

அமைச்சரவையை சினிமாவாக நினைக்கிறார் முதல்வர் விஜய் என கே.பி.முனுசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அதிமுக துணைப் பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி; பெரும்பான்மை இல்லாததால் தவெக குதிரை பேரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பதவிக்காகவே அதிமுகவில் இருந்து தவெகவுக்கு செல்கிறார்கள். மதிமுக எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்தால் வெற்றி பெற வைப்பதாக முதல்வர் விஜய் குதிரை பேரம். தவெக அரசின் குதிரை பேரம் மீது நடவடிக்கை எடுப்பதற்காகவே ஆளுநரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அதிமுக தொண்டன் ஒவ்வொருவரும் ஜாம்பவான்கள். தவெகவில் இணைந்தவர்கள் ஓடுகாலிகள். அதிமுக தொண்டன், ஆதவ் அர்ஜுனா போல் கொள்கையற்ற தொண்டன் அல்ல. வாய்ப்பு கிடைக்கும் இடங்களுக்கு எல்லாம் ஓடுகாலியாக சென்றவர்தான் ஆதவ் அர்ஜுனா. அதிமுக தவெகவில் இணையும் என்று ஆதவ் அர்ஜுனா மீண்டும் பேசினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். விஜய் ஆட்சியை இழந்தால் ஆதவ் அர்ஜுனா, விஜயபாஸ்கர் வேறு இடத்துக்கு ஓடி விடுவார்கள். ஆதவ் அர்ஜுனாவுக்கும்



விஜயபாஸ்கருக்கும் வித்தியாசம் இல்லை. கட்சி மாறி மாறி ஓடி போகும் தலைவர்கள் தான் இவர்கள்.

அதிமுகவின் 2ம் கட்ட தலைவர்கள் பனையூர் கேட்டின் முன்பு நின்று கேட் எப்போது திறக்கும்? என்று ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டு, பட்டியில் இருந்து ஆட்டுக்கூட்டம் ஓடுவது போல, ஓடிச் சென்று பார்க்கும் தலைவர் புஸ்ஸி ஆனந்த்தான். ஏனென்றால், அக்கட்சியின் தலைவரைக் கூட அவர்களால் பார்க்க முடியவில்லை. ஆட்சியில் இருந்து கொண்டு காவல்துறையை ஆதவ் அர்ஜுனா மிரட்டிக் கொண்டிருக்கிறார். சிபிஐ விசாரணையில் உள்ள கரூர் வழக்கை விமர்சிக்க ஆதவ் அர்ஜுனாவுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

கரூர் வழக்கை நீர்த்து போக செய்ய முயற்சி செய்கிறார்கள். மாத்திரை எனக் கூறி போதைப்பொருளை பயன்படுத்திய அமைச்சர் சரத் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. முதலமைச்சர் விஜய்யின் செயல்பாடே தவெக அரசு 5 ஆண்டு நீடிக்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதிமுகவில் அண்ணாமலையை இணைக்க பேச்சு என்பது அவருக்கு விளம்பரம் தேடும் செயல். அதிமுகவின் இரண்டாம் கட்ட தலைவர்களாக இருந்து தவெகவுக்கு சென்றவர்களை அக்கட்சி தலைவர் பார்க்கவில்லை. தவெக தொண்டர்கள் இல்லாத கட்சி, ரசிகர் மன்றம் கொண்ட கட்சிதான் தவெக.

புதிய கட்சியின் தோளில் காங்கிரஸ் ஏறியுள்ளது. அதிமுக திமுக கூட்டணி பேச வேண்டிய அவசியமே இல்லை. சட்டப்பேரவை நடைமுறையை முதல்வர் விஜய்க்கு யாரும் சொல்லித் தரவில்லை. அமைச்சரவையை சினிமா செட் என்பது போல் நினைத்துக் கொண்டிருக்கிறார் விஜய் என்று கூறினார்.





# நீலகிரியில் காவல் துறை சார்பில் கூடலூர் ஸ்ரீமதுரை அரசு உயர்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு கூட்டம்

கூடலூர், ஜூலை.6-

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆணைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் வழிகாட்டுதல்படி கூடலூர் உட்கோட்டம்,கூடலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஸ்ரீமதுரை அரசு உயர் நிலை பள்ளியில் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில்

விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.இக் கூட்டத்தில் SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POCSO சட்டம், Cyber crime,தீண்டாமை ஒழிப்பு குறித்து எடுத்து கூறப்பட்டது.மேலும் SC/ST மக்களுக்கான அரசின் நல திட்டங்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான அரசின் கல்வி சலுகைகள் பற்றிய நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டது .

# உதகை மாநில நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் நுகர்வோர் காலாண்டு கூட்டம்



உதகை, ஜூலை.6-

உதகை மாநில நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் நெடுஞ் சாலைத்துறை சார்பான நுகர்வோர் காலாண்டு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் முருகன் தலைமை தாங்கினார் அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் அமைப்பு பிரதிநிதிகளான கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், கோத்தகிரி நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் நாகேந்திரன், குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் ஆல்துரை, கோத்தகிரி புழுமௌண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்கத் தலைவர் வாசுதேவன், செயலாளர் முகமது சலீம், உதகை நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் அமீர்கான் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசும்போது சாலை ஓரங்களில் வளர்ந்துள்ள ஆபத்தான மரங்கள், செடி கொடிகள் வெட்டி அகற்றவும் நாடுகானி தேவாலா உள்ளிட்ட பகுதிகளில் சாலையோர தடுப்பு சுவர்கள் அமைக்கவும், பந்தலூர் முக்கட்டி சாலை மற்றும் இலியாஸ் கடை கொளப்பள்ளி சாலை அகலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் கோத்தகிரி மழைநீர் செல்ல அமைக்கப்பட்டுள்ள கால்வாய்கள் தூர்வார வேண்டும், நிழற்குடை அமைக்க இடம் ஒதுக்கி தர நடவடிக்கை எடுக்க வேண்டும். சாலையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்ற வேண்டும். குன்னூர் ரயில்வே ஸ்டேஷன் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை சார்ந்த பகுதியில் அகலப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர் உதகை நெடுஞ்சாலைத் துறை சார்பான சாலைகள் அகலப்படுத்தவும், வளர்ந்துள்ள முடிச்செடிகளை அகற்றநடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் பேசப்பட்டன. நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் முருகன் பதில் அளித்து பேசும்போது சாலைகள் அருகே உள்ள ஆபத்தான மரங்கள் வெட்டுவதற்கு வருவாய்த்துறை, வனத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் இணைந்து வெட்டிதர நடவடிக்கை எடுக்கப்படும். சாலைகள் அகலப்படுத்துவதில் அதிகபட்ச போக்குவரத்து உள்ள சாலைகள் தேர்வு செய்யப்படுவதால் அதற்கான வாகன போக்குவரத்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்காலிகமாக சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் மூலம் அகலப்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்படும். தேவையான இடங்களை ஆய்வு செய்து தடுப்பு சுவர்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மழைநீர் செல்லும் கால்வாயில் அடைப்புகள் தூர்வார ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

கூட்டத்தில் நெடுஞ் சாலைத்துறை உதகை, குன்னூர், கூடலூர், கோத்தகிரி உதவி கோட்ட பொறியாளர்கள் தேசிய நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குன்னூர் கல்லூரி வளாகத்தில் தீ பாதுகாப்பு மற்றும் செயல்முறை விளக்க முகாம்






குன்னூர், ஜூலை.6-

குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி தேசிய மாணவர் படை மற்றும் தீயணைப்புத் துறை இணைந்து, கல்லூரி வளாகத்தில் தீ பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு செயல்முறை விளக்க முகாம் ஒன்றை நடத்தின.

நிகழ்ச்சியில், Leasing Fireman பாண்டியராஜன் தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், தீயணைப்புத் துறையில் சேருவதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கமளித்தார். தொடர்ந்து, Leading Fireman காமராஜ் வீடு, கல்லூரி மற்றும் பொது இடங்களில் ஏற்படும் தீயை அணைக்கும் முறைகளைச் செய்து காட்டினார். மாணவர்களுக்குத் தீயணைப்புக் கருவிகளை கையாளும் முறைகள் விவரிக்கப்பட்டதோடு, தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் தீயணைப்பு முறைகளை நேரடியாகச் செய்து பழகினர்.அபாயம் ஏற்படும் முன் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள். ஷிளிஜி தக்சினாமூர்த்தி, லெப்டினன்ட் சிந்தியா ஜார்ஜ் மற்றும் டாக்டர் குணசீலி ஆகியோர் வலியுறுத்தினர்.



# தேனி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதித்தேர்வு நடைபெறுவதையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

பெரியகுளம், ஜூலை.6-

தேனி மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதித்தேர்வு நடைபெறுவதையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,மேரி மாதா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளியில், ஆசிரியர் தகுதித்தேர்வு நடைபெறும் மையத்தை பார்வையிட்டு ஆய்வுசெய்து தெரிவிக்கையில், ஆசிரியர்களுக்கான தகுதித்தேர்வு 1 இன்று அனைத்து இடங்களிலும் நடைபெறுகிறது. அதனையொட்டி, தேனி மாவட்டத்தில் 1302 தேர்வர்கள் எழுத விண்ணப்பித்து தேர்வில் பங்கேற்றுள்ளனர். இதில் 29 மாற்றுத்திறனாளித்தேர்வர்களும் அடங்குவர். இத்தேர்வு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பாடம் எடுக்கக்கூடிய ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வாகும். இத்தேர்வு மாவட்டத்தில் மேரிமாதா மெட்ரிக் மேல்லைப்பள்ளி, சரஸ்வதி நாடார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சரஸ்வதி நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பி.சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பழனியப்பா நினைவு மேல்நிலைப்பள்ளி ஆகிய ஐந்து மையங்களில் நடைபெறுகிறது. இத்தேர்வினை நடத்த 105 அலுவலர்கள் / ஆசிரியர்கள் நிமிக்கப் பட்டுள்ளனர். மேலும்பறக் கும்படைக்குழு நியமிக் கப்பட்டு, தேர்வுமைய கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். தேர்வு மையத்தில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தகுதித்தேர்வு மிமி நடைபெற உள்ளது. இத்தேர்வினை 3512 தேர்வர்கள் 12 தேர்வு மையங்களில் எழுத உள்ளனர். இத்தேர்வினை நடத்த 260 அலுவலர்கள் / ஆசிரியர்கள் நிமிக்கப்பட்டுள்ளனர். எனவே, தேர்வர்கள் பயன்பெற்றுக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார், இந்தஆய்வின் போதுமாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், முதன்மைக் கல்வி அலுவலர் .முருகன், மெட்ரிக் ஆய்வாளர் .வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ கிருஷ்ணகிரி தூய பாத்திமா அன்னை திருத்தல ஆலயத்தில் 53வது ஆண்டு தேர் திருவிழா ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது. மறைமாவட்ட முதன்மைக்குரு அருள்பணி ஆரோக்கிய சவரியப்பன் திருவிழா கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறும் விழாவின் முக்கிய நிகழ்வாக சனிக்கிழமை மாலை பாத்திமா அன்னையின் தேர் பவனி நகரின் முக்கிய வீதிகளில் நடைபெறுகிறது. நிறைவு நாளான ஜூலை 12ஆம் தேதி மறைமாவட்ட ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற உள்ளது.



■ சென்னை, ரெட்ஹில்ஸ் அடுத்த காந்தி நகர், எம்ஜிஆர் நகர், கலைஞர் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஜடா முனிஸ்வரர் அங்காளம்மன் ஆலய புனராவர்த்தன ஜீர்ணோர்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலயத் தலைவர் ஜெகன் மற்றும் ஆலய விழா குழுவினர் கோயில் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினார். சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



# அணைக் கரைப்பட்டி ஊராட்சியில் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

போடிநாயக்கனூர், ஜூலை.6-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், அணைக் கரைப்பட்டி ஊராட்சியில் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார்.இந்தஆய் வின்போது, மாவட்ட ஆட் சித்தலைவர் அவர்கள், அணைக்கரைப்பட்டி ஊராட்சி சிறைக்காடு கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் மலைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, அப்பகுதியில் வசித்து வரும் மக்களை சந்தித்து அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அப்பகுதி மக்கள் தங்கள் பகுதிக்கு பேருந்து வசதி, தெருவிளக்கு அமைத்தல், போதிய அளவு குடிநீர் வசதி போன்ற கோரிக்கையினை முன்வைத்தனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் , ஊரக வளர்ச்சித்துறை மூலம் உடனடியாக சோலார் மின்திட்டத்தில் தெரு விளக்குகள் அமைத்திட உத்தரவிட்டதுடன், பேருந்து இயக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். மேலும், அப்பகுதியில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்ப சிறிய மைதானம் அமைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார், அதனைத்தொடர்ந்து சிறைக்காடு பகுதியில், போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் உள்ள குப்பைகள் சேகரிக்கப்படும் குப்பை கிடங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு, குப்பைகள் அதிகளவு சேராத வண்ணம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை பயன்படுத்துமாறு சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் இந்த ஆய்வின்போது நகராட்சி ஆணையாளர் (போடிநாயக்கனூர்) ,அப்துல் முஸ்தபா, வட்டாட்சியர் போடிநாயக்கனூர் சந்திர சேகரன் , தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலன்) .கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம்) .ஜெகதீஷ் சந்திரபோஸ், மக்கத்தம்மாள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# குரோம்பேட்டை தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 24வது பட்டமளிப்பு விழாவில் 720 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்






குரோம்பேட்டை, ஜூலை.6-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் அமைந்துள்ள தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 24வது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் 720 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

தாகூர் கல்விக் குழுமத்தின் தலைவர் முனைவர் எம். மாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கல்லூரி செயலாளர் மணிகண்டன் மற்றும் அறங்காவலர் செல்வி ரக்ஷனா முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் முனைவர் எம். ஆம்ஸ்ட்ராங் மற்றும் முன்னாள் சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கவுரி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துகளையும் அறிவுரைகளையும் வழங்கினர்.தொடர்ந்து, முனைவர் எம். ஆம்ஸ்ட்ராங் 720 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி கவுரவித்தார். மேலும், கல்வியுடன் ஒழுக்கம், திறன் மேம்பாடு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.இந்த விழாவில் பல்கலைகழக அளவில் வணிக மேலாண்மை துறையில் 2ம் இடம் பிடித்த மாணவி வைஷ்ணவிக்கு தங்க பதக்கம் வழங்கி கவுரவிக்கப்பட்டார். மேலும் தாகூர் கல்வி குழுமம் சார்பில் தற்போது மாணவி வைஷ்னவி எம்.பி.ஏ. மேல் படிப்பிற்கான முழு தொகையும் தாகூர் கல்வி குழும்ம் சார்பில் ஏற்றுகொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் புருசோத்தமன் மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில், குழந்தைகள் இல்லங்களில் (Children's Homes) தங்கி கல்வி பயிலும் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு தொடங்குவதற்காக நடைபெற்ற சிறப்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (04.07.2026) அன்று குழந்தைகளுக்கு சான்றிதழ்கள், வங்கிக் கணக்கு புத்தகங்களை வழங்கினார். உடன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரா.உமாமகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விஜயகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், வருவாய்த்துறை, சுகாதாரத் துறை மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.




■ கிருஷ்ணகிரி நகராட்சி, காந்திரோடு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் ஆதரவற்றவர்களுக்கான மன நல காப்பகம் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் (04.07.2026) துவக்கி வைத்து மனநல காப்பகத்தில் சிகிச்சை முடிந்து நலம் பெற்ற இரண்டு நபர்களை சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். உடன் அரசு மருத்துவ கல்லுாரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சந்திரசேகர், மருத்துவர்கள் மரு.மது, மரு.கிருபாவதி, மரு.மலர்விழி, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜலாலுதீன் ஆகியோர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பாக, முன்னாள் படைவீரர்கள் அவர்தம் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், 8 முன்னாள் படைவீரர்கள் அவர்தம் சார்ந்தோர்களுக்கு ரூ.3 இலட்சத்து 63 ஆயிரத்து 200 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை (03.07.2026) அன்று வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், முன்னாள் படைவீரர் நலத்துறை துணை இயக்குநர் லெப் கர்னல்.அருள்மொழி (ஓய்வு) உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# கம்பம் முதல் கம்பம் மெட்டு வரை சாலை சீரமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

கம்பம், ஜூலை.6-

தேனி மாவட்டம், கம்பம் முதல் கம்பம் மெட்டு வரை மாநில நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் சாலை சீரமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் நெடுஞ் சாலைத் துறையின் மூலம் கம்பம் முதல் கம்பம் மெட்டு வரை 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச்சாலை வலுப்படுத்துதல், குறுபாலம் சீரமைத்தல், திண்காரை அமைத்தல் மற்றும் வடிகால் கட்டுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்

அதனைத்தொடர்ந்துபோடிமெட்டு சோதனைச் சாவடியில் பதிவேடுகளை பார்வையிட்டு, காவல்துறை மூலம் கண்காணிப்புப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொண்டிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார் இந்த ஆய்வில் நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் .குமணன் உதவிக்கோட்டப் பொறியாளர் .வைரகுமரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் அதிமுக அண்ணா தொழிற்சங்க ஆலோசனைக் கூட்டம்: தவெக, ஆதவ் அர்ஜுனா, அண்ணாமலை மீது கே.பி.முனுசாமி கடும் தாக்கு

கிருஷ்ணகிரி, ஜூலை.6-

அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. அண்ணா தொழிற்சங்கத்தின் புதிய மாநிலச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள தமிழரசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அதிமுக துணைப் பொதுச் செயலாளர் மற்றும் முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி கலந்து கொண்டு நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கப் பொறுப்பாள ர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த கே.பி.முனுசாமி, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்த கருத்துக்கு கடும் பதிலடி அளித்தார்."அதிமுகவின் ஒவ்வொரு தொண்டரும் ஜாம்பவான்தான்.



அந்தத் தொண்டர்களால் உருவாக்கப் பட்டவர்கள்தான் இன்று கட்சியை விட்டு ஓடியுள்ள ஓடுகாலிகளும், சந்தர்ப்பவாதிகளும். அதிமுகவை யாராலும் பலவீனப்படுத்த முடியாது," என்றார்.அதிமுகவினர் 90 சதவீதம் பேர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய உள்ளதாக ஆதவ் அர்ஜுனா கூறிய கருத்து குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, "அவருக்கு நிலையான கொள்கையே கிடையாது. திமுக, விசிக, அதிமுக என பல்வேறு கட்சிகளுக்குச் சென்றவர். 31 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த, 2 கோடி தொண்டர்களைக் கொண்ட பேரியக்கத்தை விமர்சிக்க அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை. இனி இதுபோன்று பேசினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்," என எச்சரித்தார்.கரூர் சம்பவம் தொடர்பாக ஆதவ் அர்ஜுனா தெரிவித்த கருத்து குறித்தும் அவர் பதிலளித்தார். "அமைச்சர் பொறுப்பில் இருக்கும் ஒருவர் காவல்துறையை மிரட்டும் வகையில் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாது. உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் சிபிஐ விசாரித்து வரும் வழக்கில் இவ்வாறு கருத்து தெரிவிப்பது சாட்சிகளை அச்சுறுத்தும் செயலாகும். இது வழக்கை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சியாகவே பார்க்கப்படுகிறது," என்றார்.பொதுமக்கள் ஆளுநரிடம் நேரடியாக மனு அளிக்கலாம் என்ற கருத்து குறித்து பேசுகையில், "அரசு மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆளுநரிடம் மனு அளிப்பதில் தவறில்லை. தற்போதைய அரசு பெரும்பான்மை பலம் இல்லாததால் மற்ற கட்சிகளை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மதிமுக பொதுச்செயலாளர் வைகோவே இதுகுறித்து வெளிப்படையாக பேசியுள்ளார். அரசிடம் நியாயம் கிடைக்காது என்பதால்தான் ஆளுநரிடம் மக்கள் மனு அளிக்கின்றனர்," என்றார்.

பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை குறித்த கேள்விக்கு, "54 ஆண்டுகால பாரம்பரியம் கொண்ட அதிமுகவின் தொண்டன் தனது தலைவனைத் தவிர வேறு யாரையும் பார்க்க மாட்டான். நேற்று வந்த ஒருவருக்காக அதிமுகவில் தீர்மானம் போடுவதாகக் கூறி ஊடகங்கள் தேவையற்ற விளம்பரத்தை உருவாக்குகின்றன," என்று விமர்சித்தார்.மேலும், "எடப்பாடி கே.பழனிசாமியின் தியாகத்தையும் உழைப்பையும் அதிமுக தொண்டர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சுயநலத்திற்காகவும், அமைச்சர் பதவிக்காகவும் தமிழக வெற்றிக் கழகத்திற்குச் சென்றவர்கள் அங்கு ஏமாற்றத்தையே சந்திப்பார்கள். தவெக தலைவர் இன்னும் தனது முகத்தையே காட்டவில்லை. இங்கிருந்து சென்ற இரண்டாம் கட்டத் தலைவர்கள் அங்கு 'புஸ்ஸி ஆனந்த்' வாசலில் ஆட்டு மந்தையைப் போலக் காத்திருக்கின்றனர்," என்று கே.பி.முனுசாமி கடுமையாக விமர்சித்தார்.

நிகழ்ச்சியில் அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அசோக் குமார், இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், நகர செயலாளர் கேசவன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# தமிழகத்தில் ஜூலை 11 வரை மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஜூலை.6-

தமிழகத்தில் நாளை முதல் ஜூலை 11ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது வடக்கு ஒடிசா கடலோரத்தில் சந்த்பாலி மற்றும் பாலசோர்க்கு இடையே திகாவிர்க்கு அருகில் நாளை கரையை கடக்கக்கூடும்.

தமிழகத்தில் நாளையும் (ஜூலை 6), நாளை மறுதினமும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஜூலை 8ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் லேசானது முதல் மிதமான மழையும், ஜூலை 9 முதல் 11ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி, திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் தலா 8 செமீ, ஊத்தில் 6 செமீ, நீலகிரி மாவட்டம் மேல் பவானி, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, கன்னியாகுமரி மாவட்டம் முள்ளங்கினாவிளை, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# ஊத்துக்கோட்டை பூந்தோப்பு வீதியில் உள்ள ஸ்ரீ முனீஸ்வரர் திருக்கோயிலின் மூன்றாம் ஆண்டு கும்பாபிஷேக விழா

திருவள்ளூர், ஜூலை.6-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பூந்தோப்பு வீதியில் உள்ள ஸ்ரீ முனீஸ்வரர் கோவிலின் மூன்றாம் ஆண்டு கும்பாபிஷேகம் விழா கோவில் அறங்காவலர் சி.சத்தியமூர்த்தி தலைமையில் மற்றும் நிர்வாகிகள் லயன்பாஸ்கர் ஸி.மோகன, சரவணன், பாலசுப்பிரமணி, மணிகண்டன் , சந்திரசேகர், முரளி, ஒருங்கிணைப்பில் தலைமை பூசாரி ஷி.முருகன்சிவாச்சாரி மற்றும் சிவன் ஆலயத்தின் பூசாரி மகாராஜன்சிவம், சுரேஷ் குழுவினர் யாக காலபூஜைகள் செய்து கலசநீரை கோவில் கருவறையில் வைத்து சிறப்பு பூஜை செய்து கோபுர கலசத்தின் மீது ஊற்றி அபிஷேகம் செய்தனர் பின்னர் அங்கு கூடியிருந்த பக்தர்கள் மீது புனித நீரை ஊற்றினர் இந்த கும்பாபிஷேகத்தில் சுமார் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சாமிதரிசனம் செய்தனர்

# கொடைக்கானலில் தங்கும் விடுதி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் பங்கேற்பு

கொடைக்கானல், ஜூலை.6-

கொடைக்கானலில் தங்கும் விடுதி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் கலந்துகொண்டார். இதில் தங்கும் விடுதி உரிமையாளர்களின் நிலை குறைகளை கேட்டறிந்து விரைவில் அதற்கான முடிவுகளை செய்து கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார் அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பரிமாணவுடன் கூறுகையில்...தேர்தல் வாக்குறுதியில் கொடைக்கானலில் சட்டமன்ற உறுப்பினரின் அலுவலகம் திறக்கப்படும் என தெரிவித்திருந்த நிலையில் தற்போது இரண்டு மாதம் காலம் ஆன நிலையில் நகராட்சி அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தர முடியாது என நகராட்சி ஆணையாளர் தெரிவித்ததாகவும், இதற்கு முன்பாக இருந்த திமுக எம்எல்ஏ மற்றும் அதிமுக எம்எல்ஏக்களுக்கு அலுவலகம் கொடுக்கப்பட்டுள்ளது தமக்கு மட்டும்



மறுக்கப்பட்டதாக தெரிவித்தார். இருந்த போதும் அதற்காக உயர் அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு விரைவில் அலுவலகம் அமைக்கப்படும் என ரவி மனோகர் தெரிவித்தார்.

மேலும் 5 முக்கிய சுற்றுலா தளங்களில் 400 வாகனங்கள் வீதம் 2500 வாகனங்கள் வரை வாகன நிறுத்தம் செய்ய முயற்சிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார். கொடைக்கானலில் பல்வேறு பகுதிகளில் குப்பை கழிவுகளால் நிறைந்து இருப்பதாகவும், ஏரியை சுற்றி மிகவும் மோசமான சூழல் உள்ளதால்,ஏரி நீரும் மாசடைந்து உள்ளது, முதலில் புதிய நகராட்சி ஆணையாளர் வந்தவுடன் அதனை ஆய்வு செய்து சரி செய்ய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்தார்.நான் அம்மாவின் விசுவாசி, இன்னும் ஐந்து ஆண்டுகள் எதைப்பற்றியும் நினைக்காமல், என்னுடைய நினைவெல்லாம் இந்த பழனி சட்டமன்ற தொகுதியில் மட்டுமே கவனம் இருக்கும், அதிமுக கட்சியில் இருந்து போகின்றவர்கள், இருப்பவர்கள் குறித்து கருத்து தெரிவிக்க விருப்பவில்லை,அது அவர்களின் தனிப்பட்ட விருப்பம், ஆனால் தொண்டர்கள் மத்தியில் வருத்தப்படதான் செய்வார்கள் ,அந்த வருத்தம் எனக்கும் உள்ளது என தெரிவித்தார். வருவாய் துறையில் 350 கும் மேற்பட்ட போலி பட்டாக்கள் போடப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்கு இது போன்று பல குற்றச்சாட்டுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, அதனை ஆய்வு செய்து வெளியே கொண்டு வருவோம், அப்படி தவறாக கொடுக்கப்பட்ட பட்டங்களை ரத்து செய்யபடும் என தெரிவித்தார்.

சின்னூர், பெரியூர் மலைக்கிராமத்தில் சாலை வசதி இல்லாத நிலையில் அதுகுறித்து விரைவில் முயற்சி செய்யப்படும், மேலும் சாலை வசதி இல்லாத கிராமங்களுக்கும் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும், தொடர்ந்து கிடப்பில் போடப்பட்டுள்ள பணிகள் குறித்து தனக்கு இன்னும் முழு அறிக்கையும் கிடைக்கவில்லை, தொடர்ந்து அரசு அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டு வருவதால் பணிகள் குறித்து முழு விபரம் தெரியவில்லை, அது கிடைத்தவுடன் தனது பணியை உடனடியாக தொடங்கிவிடுவேன் என்று கூறினார். கொடைக்கானலுக்கு ஒரே நுழைவாயில், மட்டுமே உள்ளதால் கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது, இதனை மாற்றி புறவழி சாலை அமைக்க மூன்று வழி தடங்கள் உள்ளதாகவும் அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும், அது முடியும் பட்சத்தில் அனைவருக்கும் சுலபமானது அமையும் என்று கூறினார்...மல்டி லெவல் கார்பார்க்கிங் குறித்து ஆணையாளர் மாற்றம் செய்துள்ளார், atha ai தொடர்ந்து புதிய ஆணையாளர் வந்தபிறகு மல்டி லெவல் கார்பார்க்கிங் அமைக்க சிறிது கால அவகாசம் கொடுக்கப்பட்டதாக, சுற்றுலா தளங்களில் உள்ள மாற்று வழி தடம் குறித்து பெருமாள் மலை to வில்பட்டி, மறையூர் கீழநாவயல், மஞ்சபட்டி MANNAVANUR வழியாக மாற்ற பழம்பத்தூர் கிளாவரை பொந்துகுளி வழியாக பழனி செல்லலாம் வனத்துறை பகுதியில் பேசி முடிவு எடுக்கப்படும்,பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் காப்பகமாக மாற்றினால்

பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி, அம்மாவின் விசுவாசி , தொகுதி முக்கியம் எனக்குஇன்னும் ஐந்து ஆண்டுகள்அதிமுகவில் இருந்து மாறியவர்கள் அவர்கள் விருப்பம், சின்னூர் பெரியூர் மலைக்கிராமத்தில் சாலை அமைக்க நடவடிக்கை எடுபடும்

# சிவகங்கை: மறைந்த திமுக ஒன்றிய துணைச் செயலாளர் ப.பஞ்சவர்ணம் உடல் மருத்துவக் கல்லூரிக்கு தானம் குடும்பத்தினர் நெகிழ்ச்சி முடிவு

சிவகங்கை, ஜூலை.6-

சிவகங்கையைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரரும், திமுக தெற்கு ஒன்றிய துணைச் செயலாளருமான மறைந்த ப.பஞ்சவர்ணம் என்பவரின் உடல், அவரது குடும்பத்தினரால் மருத்துவ மாணவர்களின் கல்வி ஆராய்ச்சி பயன்பாட்டிற்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

சமூகப் பணியில் அர்ப்பணிப்பு:

சிவகங்கை அஞ்சல் மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட கொட்டகுடி (கதவு எண்: 2/149) பகுதியைச் சேர்ந்தவர் ப.பஞ்சவர்ணம். முன்னாள் ராணுவ வீரரான (*Ex.Int-Hav*) இவர், கருவூல கணக்கராகவும் (*Treasury-Accountant*) பணியாற்றியுள்ளார். மேலும், திமுகவின் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, மக்கள் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.




GOVERNMENT SIVAGANGAI MEDICAL COLLEGE
DEPARTMENT OF ANATOMY
SIVAGANGAI- 630 561. TAMILNADU, INDIA
பாராட்டுச் சான்றிதழ்
மறைந்த திரு/திருமதி PANJAVARNAM
அவர்களின் உடல் மருத்துவ மாணவர்களின் செயல்முறை பயன்பாட்டிற்காக 03.07.26 அன்று அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி உடற்கூறு துறையில் தானமாக பெறப்பட்டது. அன்னாரின் மகத்தான செயலுக்கு எங்களது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
சிவகங்கை - 630 561
தேதி : 03.07.26
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
உடற்கூறு துறை
அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி
சிவகங்கை



மருத்துவக் கல்லூரிக்கு உடல் தானம்:சமீபத்தில் மறைந்த ப.பஞ்சவர்ணம் அவர்களின் உடல், மருத்துவ மாணவர்களின் செயல்முறைப் படிப்பிற்காகவும், ஆராய்ச்சிப் பயன்பாட்டிற்காகவும் தானமாக வழங்க அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர். இதன்படி, கடந்த 03.07.2026 அன்று அவரது உடல் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி உடற்கூறு ஆய்வுத் துறையிடம் (*Department of Anatomy*) முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவம்:மறைந்த ப.பஞ்சவர்ணம் அவர்களின் இந்த உன்னதமான மற்றும் தூரநோக்குச் சிந்தனைமிக்க செயலைப் பாராட்டி, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி உடற்கூறு ஆய்வுத் துறையின் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முன்னிலையில் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த உடல் ஒப்படைப்பு நிகழ்வின் போது மறைந்த ப.பஞ்சவர்ணம் அவர்களின் மனைவி ப.தனவள்ளிக்கண்ணு, மகன் ப.ஸ்ரீதேவேந்திரன், மருமகள் ஷி.சபீனா மற்றும் மகள் ப.ஆஞ்சென்யா உள்ளிட்ட குடும்பத்தினரும், மருத்துவக் கல்லூரி அதிகாரிகளும் உடனிருந்தனர்.

மறைவிற்குப் பின்பும் மருத்துவ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தனது உடலையே தானமாக தந்து உதவிய பஞ்சவர்ணம் மற்றும் அவரது குடும்பத்தினரின் இந்த நற்செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.



# அதிகாரத் தலையீடா? காரைக்குடியில் அரசு அதிகாரிகளுடன் அமைச்சரின் தந்தை திடீர் ஆய்வு

## பொதுமக்கள் எதிர்ப்பால் பரபரப்பு!

காரைக்குடி, ஜூலை .6-



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே புதுவயல் பேரூராட்சியில் நடைபெற்று வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகளை, அரசுப் பொறுப்பில் இல்லாத அமைச்சரின் தந்தை அதிகாரிகளுடன் இணைந்து ஆய்வு செய்ததாகக் கூறப்படும் சம்பவம் பெரும் சர்ச்சையையும், விவாதத்தையும் கிளப்பியுள்ளது.புதுவயல் பேரூராட்சிப் பகுதியில் ரூ.5.51 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. ஆனால், இந்தத் திட்டம் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறி, அப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி தமிழக அரசின் கனிமவளத்துறை அமைச்சரிடம் பொதுமக்கள் தரப்பில் மனுவும் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், கனிமவளத்துறை அமைச்சர் டி.கே. பிரபுவின் தந்தை கருணாநிதி, புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் உமா மகேஸ்வரன் மற்றும் உதவி பொறியாளர் சரவணன் ஆகியோருடன் இணைந்து, கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததாகத் தெரிகிறது.

அமைச்சரின் தந்தை அதிகாரிகளுடன் வந்திருப்பதைக் கண்ட அப்பகுதி பொதுமக்கள் அங்கு திரண்டனர். இந்தத் திட்டத்தால் தங்களுக்கு ஏற்படக்கூடிய சுகாதாரப் பாதிப்புகள் மற்றும் இதர சிக்கல்களை அதிகாரிகளிடம் கோபத்துடன் எடுத்துரைத்து, தங்களது பலத்த எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பான சூழல் நிலவியது. பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து, கருணாநிதி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுவாக, அரசின் திட்டப் பணிகளைச் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் அல்லது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகளே ஆய்வு செய்வதுதான் நிர்வாக நடைமுறை. ஆனால், எந்தவித அரசுப் பொறுப்பிலும் இல்லாத அமைச்சரின் தந்தை, அரசு அதிகாரிகளை முன்னிறுத்தி ஆய்வு மேற்கொண்டதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தற்போது அரசியல் மற்றும் சமூக வட்டாரங்களில் கடுமையான விமர்சனங்களை எழுப்பியுள்ளது."அரசுப் பொறுப்பில் இல்லாத ஒருவர் எந்த அடிப்படையில் அதிகாரிகளுடன் சென்று அரசுப் பணிகளை ஆய்வு செய்யலாம்? இது நிர்வாக நடைமுறைகளை மீறிய அதிகாரத் தலையீடு இல்லையா?" என்ற கேள்விகளை எழுப்பி, சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். பொதுமக்களின் எதிர்ப்புக்குப் பின் நடந்துள்ள இந்தச் சம்பவம், காரைக்குடி பகுதியில் தற்போதைய முக்கியப் பேசுபொருளாக மாறியுள்ளது.





# இடைக்காட்டூரில் காதணி விழா : ஜான் பாண்டியனுக்கு சால்வை அணிவித்து மரியாதை

மானாமதுரை ஜூலை,06

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் இடைக்காட்டூரைச் சேர்ந்த தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் மாவட்டச் செயலாளர் சுரேஷ் இல்லத்தில் நடைபெற்ற காதணி விழாவில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், மானாமதுரை தேவேந்திர மக்கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் அதன் நிறுவனர் சிவசங்கரி பரமசிவம், பி.எஸ்சி., கலந்து கொண்டு, தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவனத் தலைவர் ஜான் பாண்டியனுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் அரசியல் மற்றும் சமூக அமைப்புகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# நான் முதல்வன் திட்டத்தைத் தொடர்ந்து முதல்வர் படைப்பகம் பெயரில் “முதல்வர்” என்ற சொல் நீக்கம்

சென்னை, ஜூலை.6-

நான் முதல்வன் திட்டத்தைத் தொடர்ந்து முதல்வர் படைப்பகம் பெயரில் "முதல்வர்" என்ற சொல் நீக்கபட்டுள்ளது. முதல்வர் படைப்பகம் என்பதற்கு பதிலாக 'படைப்பகம்' என சென்னை மாநகராட்சி டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள முதல்வர் படைப்பகத்தின் இயக்கம், பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்வதற்கான டெண்டரில் வெறும் ‘படைப்பகம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் 16 இடங்களில் செயல்படும் முதல்வர் படைப்பகம் மாணவர்கள் உள்பட பலருக்கு பயன்பட்டு வருகிறது

# குதிரை பேரமா? அப்படின்னா? கேட்கிறார் செங்கோட்டையன்

கோபி, ஜூலை.6-

குதிரை பேரம் என்றால் என்ன என்பது குறித்து சிலபஸில் தேடுகிறோம் என்று அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார். ஈரோடு மாவட்டம் கோபி அருகே நல்லகவுண்டன்பாளையத்தில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் இன்று அளித்த பேட்டி



குதிரை பேரம் என்பது குறித்து எனக்கு புரியவில்லை. எல்லோரும் குதிரை பேரம் என சொல்கிறார்கள். பலரும் புரியாத ஒன்றை குதிரை பேரம் என சொல்கின்றனர். அதற்கு வேறு பொருள் தமிழ்நாட்டில் தேடிக் கொண்டிருக்கின்றோம். எப்படி அதற்கு பதில் சொல்வது என சிலபஸில் தேடிக் கொண்டிருக்கின்றோம். கிடைத்தால் அதற்கு பதில் சொல்கிறோம். குதிரை பேரம் பேச வேண்டிய அவசியம் இந்த ஆட்சிக்கு இல்லை. ஆளுநர் அதிகார வரம்பை மீறி செயல்படுவது குறித்து சட்ட அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்

# சுற்றுலா பயணிகளை கவரும் சைக்ளோமென் மலர் அலங்காரம்

ஊட்டி, ஜூலை.6-

ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர்கள் இல்லாத நிலையில் கண்ணாடி மாளிகையில் வைக்கப்பட்டுள்ள சைக்ளோமென் மலர்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்திற்கு நாள்தோறும் பல ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகளில் 90 சதவீதம் பேர் ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்காவிற்கு செல்கின்றனர். எனவே, சுற்றுலா பயணிகளை வரவேற்கும் வகையில் பூங்காவில் பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அதில்,மலர்கள் பூத்து காணப்படும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது வாடிக்கை. குறிப்பாக, கோடை காலங்களில் ஊட்டி வரும் சுற்றுலா பயணிகிளை மகிழ்விக்கும் பொருட்டு பூங்காவை தயார் செய்யப்படும்.

இந்நிலையில் முதல் சீசன் முடிந்த நிலையில், தற்போது இரண்டாம் சீசனுக்காக பூங்கா தயார் செய்யும் பணிகள் நடந்து வருகிறது. இதனால், பூங்காவில் உள்ள அனைத்து மலர் செடிகளும் அகற்றப்பட்டது. தற்பேோது விதைப்பு பணிகள் மற்றும் நாற்று உற்பத்தியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். பூங்காவில் மலர்கள் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது. இதனால், பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அதேசமயம், பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் மட்டும் தொட்டிகளில் பல்வேறு மலர் செடிகள் கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பால்சம், பிகோனியா,சைக்ளோமென் போன்ற மலர் தொட்டிகளை கொண்டு மலர் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. மலர்களே இல்லாத பூங்காவில், கண்ணாடி மாளிகையில் உள்ள மலர்களை கண்டு சுற்றுலா பயணிகள் ரசித்து செல்கின்றனர். வரும் செப்டம்பர் மாதம் வரை ஊட்டி தாவரவியல் பூங்கா பாத்திகள் மற்றும் தொட்டிகளில் மலர்களை காண முடியாத நிலையில், கண்ணாடி மாளிகையில் உள்ள மலர் அலங்காரம் மட்டுமே சுற்றுலா பயணிகள் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது

# சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் பங்கேற்க ஜூலை 31க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூலை.6-

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள சமாதான் சாமரோஹ் சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் பங்கேற்க ஜூலை 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு மத்தியஸ்தம் மூலம் தீர்வு காணுதல் மற்றும் தகராறுகளை இணக்கமாக தீர்த்தலுக்காக உச்சநீதிமன்றம் 'சமாதான் சமாரோஹ்' திட்டத்தின் ஒரு பகுதியாக சிறப்பு மக்கள் நீதிமன்றங்களை நாடு முழுவதும் கடந்த ஏப்.21ம் தேதி முதல் நடத்தி வருகிறது. 'பங்கேற்பு நீதி' மற்றும் 'நீதியை மக்களின் இருப்பிடத்துக்கே கொண்டு சேர்த்தல்' ஆகிய வற்றை மையமாகக் கொண்டு இந்த முன்னெடுப்பு செயல்படுத்தப் படுகிறது.

இந்த சமாதான் சமாரோஹ் ஆகஸ்ட் 21, 22 மற்றும் 23ம் தேதிகளில் நடைபெறும் சிறப்பு மக்கள் நீதிமன்றத்துடன் நிறைவடைகிறது. எனவே, அனைத்து வழக்கறிஞர்களும், வழக்காடிகள் மற்றும் வழக்கு தொடர்புடைய அனைத்து தரப்பினரும் இந்த முன்னெடுப்பின் கீழ் தகராறுகளை திறம்பட தீர்ப்பதில் பங் கேற்று தங்களது பங்களிப்பை அளிக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. வழக்கு தரப்பினர் நேரடியாகவோ அல்லது காணொலி மூலமாகவோ ஆஜராகி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் அவர் https://forms.gle/jqx-efqF4BCWzukoP6 என்ற இணைப்பில் படிவத்தை பூர்த்தி செய்து வரும் ஜூலை 31ம் தேதிக்குள் தங்களது கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு சமாதான் சமாரோஹ் ஒருங்கிணைந்த சேவை மையத்தின் பொறுப்பாளர் (011 2311 2428 ), ஒருங்கிணைந்த சேவை மையம் (011 2311 6464 ), இயக்குநர் (011 2311 5652 ) அல்லது special lokadalat 2026@sci.nic.in என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெங்களூருவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க தண்ணீர்க் கட்டுப்பாடுகள் அமல்!

பெங்களூரு, ஜூலை.6-

எல் நினோ தாக்கத்தால் பெங்களூருவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க, குடிநீரைப் பயன்படுத்தி வாகனங்கள் கழுவ, செடிகளுக்கு ஊற்ற, நீச்சல் குளங்களை நிரப்ப முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்களில் தண்ணீர் நுகர்வைக் குறைக்கும் Aeratorகள் பொருத்துவது கட்டாயம். இதை மீறினால் ரூ.5,000 அபராதம், குடிநீர் விநியோகம் 50% குறைக்கப்படும் எனவும் பெங்களூரு குடிநீர் வழங்கல் வாரியம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161